ந.க.எண்.அ1/283/2025 நாள்: 06.02.2026

# பத்திரிக்கை செய்தி

சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் செயல்பட்டுவரும், வட்டார இயக்க மேலாண்மை அலகில் ஒப்பந்த அடிப்படையில் வட்டார ஒருங்கிணைப்பாளராக பணியாற்ற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**இதுகுறித்து, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி.கா.பொற்கொடி அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு.**

சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் செயல்பட்டுவரும், வட்டார இயக்க மேலாண்மை அலகில் ஒப்பந்த அடிப்படையில் வட்டார ஒருங்கிணைப்பாளராக பணியாற்ற பின்வரும் அடிப்படையில் தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பணிக்கு விண்ணப்பிப்போர் ஏதேனும் ஒரு துறையில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், MS Office கணினி பிரிவில் குறைந்தபட்சம் 3 மாத கால சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது கணினி பிரிவில் இளங்கலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். 30 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும், 5 வருடம் மகளிர் சுய உதவிக்குழுவிலோ அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலோ முன் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும், தொடர்புடைய ஒன்றியத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும், இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும், எவ்வித குறைபாடுகளுமின்றி சிறப்பாக பணி செய்தவராக இருத்தல் வேண்டும் மேலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / புது வாழ்வு திட்டம் / IFAD திட்டம் மற்றும் இதர அரசு நிறுவனங்களில் நன்னடத்தை மற்றும் நிதி முறைகேடு செய்து பணி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

sivaganga.nic.in –ல் recruitment section-ல் சென்று விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து 16.02.2026-க்குள் விண்ணப்பிக்கலாம். இந்த நியமனம் முற்றிலும் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே என்பதால் பிற சலுகைகள் கோர இயலாது மற்றும் பணியினை முறைப்படுத்த இயலாது.

எனவே, தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத்துடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களை இணைத்து ஒரு மூடிய உறையில் 16.02.2026 மாலை 05.00 மணிவரை நேரில் சமர்ப்பிக்கவோ அல்லது கீழ்கண்ட முகவரிக்கு பதிவு / விரைவு தபாலில் அனுப்பிடுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-**

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி கட்டிடம் (DRDA Building),
வேலுநாச்சியார் விருந்தினர் மாளிகை அருகில்,
சிவகங்கை - 620 001.

**விண்ணப்பிக்க கடைசி நாள்:** 16.02.2026 (மாலை 05.00 மணி)

16.02.2026 மாலை 05.00 மணிக்கு பிறகு வரப்பெறும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**சிவகங்கை.**